# பாரதியார் பல்கலைக்கழகம், கோவை – 641 046

## பாடத்திட்டம் – பகுதி – 1 தமிழ்த் தாள் IV

### (2007–2008ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது

**நான்காம் பருவம் (செஃயுள், நாடகம், இலக்கணம், இலக்கிய வரலாறு, படைப்பிலக்கியப் பயிற்சி)**

**1. செஃயுள் – 1** செஃயுள் திரட்டு, பல்கலைக்கழக வெளியீடு

**2. நாடகம்** – 'கனகை' – பேராசிரியர் டாக்டர் கா அரங்கசாமி
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41–பி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
சென்னை – 98

**அலகு : 1 – அன்பும் பண்பும்**

குறுந்தொகை – 5 பாடல்கள் (87, 66, 8, 184, 144)

நற்றிணை – 2 பாடல்கள் (40, 149)

அகநானூறு – 2 பாடல்கள் (36, 195)

கலித்தொகை – 2 பாடல்கள் பாலைக்கலி (10) குறிஞ்சிக்கலி (1)

**அலகு : 2 – வீரம், கொடை, பக்தி**

புறநானூறு – அரசர்கள் பாடிய 5 பாடல்கள் (72,74,183,188,216)

பத்துப்பாட்டு – திருமுருகாற்றுப்படை (முழுவதும்)

**அலகு : 3 –படைப்புத்திறன்**

'கனகை' – நாடகம்

**அலகு : 4 –பொருள் புலப்பாட்டுத்திறன்**

இலக்கணம் : அகத்திணை, புறத்திணை
திணைதுறைப் பொருத்தமும் விளக்கமும்

**அலகு : 5 –இலக்கிய வரலாறு : பாடத்திட்டத்தைத் தழுவியது**

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதிணென்கீழ்க்கணக்கு, தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

**படைப்பிலக்கியப் பயிற்சி**

ஓரங்க நாடக உருவாக்கம், சிறுகதை உருவாக்கம், கவிதை உருவாக்கம், நூல் மதிப்பீட்டுப் பயிற்சி

# குறுந்தொகை

இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று, குறுகிய அடிகளால் அமைந்ததால் குறந்தொகை ஆயிற்று. 4 அடி முதல் 8 அடிவரை உள்ள பாடல்கள் இதில் உள்ளன. ஒரு பாடல் (307) மட்டும் ஒன்பது அடிகளைக் கொண்டுள்து. பாரதம் பாடிய பெருந்தேவனார் இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். கடவுள் வாழ்த்தோடு மொத்தம் 402 பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்களைப் பாடிய புலவ.ர்களின் எண்ணிக்கை 205. இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ. பழந்தமிழரின் அகவாழ்க்கையையும் பல வரலாற்றுச் செஃதிகளையும் அறிந்துகொள்ள இந்நூல் பெரிதும் உதவுகிறது.

## குறிஞ்சி

1. துறை : தலைமகள் தெஃவத்திற்குப் பராஅயது

‘மன்ற மராஅத்த பேஎம்முதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம்’ என்ப, யாவதும்
கொடியர் அல்லர்எம் குன்றுகெழு நாடர்
பசைஇப் பசந்தன்று நுதலே
நெகிழ நெகிழ்ந்தன்று, தடமென் தோளே,

பாடல் எண்.87 – கபிலர்

## முல்லை

2. துறை : பருவம் கண்டு அழிந்த தலைமகளைத் தோழி, ‘பருவம் அன்று’ என்று வற்புறீஇயது.

மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங்கு அத்தம் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை, நெரிதரக்
கொம்புசேர் கொடிஇணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் கார் என மதித்தே

பாடல் எண்.66–கோவர்த்தனர்

## மருதம்

3. துறை : கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் எனக்கேட்ட காதற்பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது

கழனி மா அத்து விளைந்துஉகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்

எம்இல் பெருமொழி கூறி, தம்இல்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல,
மேவன செஃயும் தன்புதல்வன் தாஃக்கே

பாடல் எண் 8 –ஆலங்குடி வங்கனார்

**நெஃதல்**

4. துறை : கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது

அறிகரி பொஃத்தல் ஆன்றோர்க்கு இல்லை,
குறுகல் ஓம்புமின் சிறுகுடிச் செலவே
இதற்கு இதுமாண்டது எண்ணாது, அதற்பட்டு,
ஆண்டு ஒழிந்தன்றே மாண்தகை நெஞ்சம்
மயிற்கண் அன்ன மாண்முடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉம் கான லானே

பாடல் எ.184 – ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன்

**பாலை**

5. துறை : மகட்போக்கிய செவலித்தாஃ சொல்லியது

கழிய காவி குற்றும், கடல
வெண்தலைப் புணரி ஆடியும், நன்றே
பிரிவுஇல் ஆயம் உரியது ஒன்று அயர,
இவ்வழிப் படுதலும் ஒல்லாள் அவ்வழிப்
பரல்பாற் படுப்பச் சென்றனன் மாதோ
செல்மழை தவழும் சென்னி
விண்உயர் பிறங்கல் விலங்குமலை நாட்டே

பாடல் எண். 144 – மதுரை ஆசிரியன் கோடங்கொற்றன்

# நற்றிணை

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான இந்நூல் 9 அடி முதல் 12 அடி வரையுள்ள ஐந்திணை தழுவிய 400 பாடல்களைக் கொண்டது. இவற்றை 275 புலவர்கள் இயற்றியுள்ளனர். இந்நூலைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியாவான். நற்றிணை, பெயருக்கேற்பப் பல நலன்களைப் பெற்றுத் திகழ்கின்றது.

## மருதம்

1. துறை : தலைமகட்குப் பாங்காயினார் கேட்பப் பரத்தை சொல்லியது

நெடுநா ஒள்மணி கடிமனை இரட்ட
குரைஇலைப் போகிய விரவுமணற் பந்தர்,
பெரும்பாண் காவல் பூண்டென, ஒருசார்,
திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப,
வெறிஉற விரிந்த அறுவை மெல்அணைப்
புனிறுநாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச,
ஐயவி அணிந்த நெஃயாட்டு ஈரணிப்
பசுநெஃ கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை ஈர்இமை பொருந்த
நள்ளென் கங்குல், கள்வன் போல,
அகன்துறை ஊரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே

பாடல் எண்:140 – கோண்மா நெடுங்கோட்டனார்.

## நெஃதல்

2. துறை : 1 . தோழி தலைவியை உடன்போக்கு வலித்தது

2. சிறைப்புறமாகச் சொல்லியதூஉமாம்.

சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி,
மறுகில் பெண்டிர் அம்பல் தூற்ற,
சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப
அலந்தனென் வாழி தோழி கானல்
புதுமலர் தீண்டிய பூநாறு கு.உச்சுவல்

கடுமான் பரிய இதழ்பரி கடைஇ,
நடுநாள் வ.உம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவு அயர்ந்திசினால், யானே
அலர்சுமந்து ஒழிகஇவ் அழுங்கல் ஊரே

பாடல் எண்.149 – உலோச்சனார்

## அகநானூறு

13 அடி சிற்றெல்லையும் 31 அடி பேரெல்லையும் கொண்ட 400 செஃயுட்களைக் கொண்டது. பழைய இலக்கியங்களுள் ஐந்திணை தழுவி விளங்கும் இந்நூல் ஒன்றே 'அகம்' என்னும் பெயரமைந்து காணப்படுகிறது. அகத்திணையை முழுமையான அளவில் விளக்கும் பாடல்களைக் கொண்டமையால் 'அகம்' எனவும் 'அகப்பாட்டு' எனவும் அகம் பற்றிக் கூறும் நானூறு பாக்களைக் கொண்டதனால் 'அகநானூறு' என்றும் வழங்கப்படுகிறது தொகை நூல்களுள் நீண்ட அடிகளைக் கொண்டுள்ளதால் இந்நூல் 'நெடுந்தொகை' என்றும் வழங்கப்பெறும்.

இந்நூலைத் தொகுத்தவர் உப்பூரிக்குடிக்கிழார் மகனார் உருத்திரசன்மன். தொகுப்பித்தவன் – பாண்டியன் உக்கிரப் பெருவழுதி, 145 புலவர்கள் இந்நூலின் பாடல்களைப் பாடியுள்ளனர். அகப்பொருள் நூலான இந்நூல் தமிழக வரலாற்றுச் செஃதிகள் – குறுநில மன்னர்கள் பற்றிய செஃதிகள், இதிகாச புராணச் செஃதிகள் ஆகியவற்றைக் கூறுகிறது. அகநாநூற்றுப் பாக்களை வரிசைப்படுத்தி அமைத்தமுறை வியத்தற்குரியதும்., தனிச்சிறப்பு வாஃந்ததுமாகும். 1, 3, 4, 7, 9 என ஒற்றைப்படை எண்பற்றி வரும் பாக்கள் பாலைக்கு உரியவை. 2, 8, 12, 18, 22, 28 எனனும் முறைபற்றி வரும்ப ாக்கள் குறிஞ்சிக்கு உரியவை. 4, 14, 24, 34 என்னும் முறைபற்றி வரும்பாக்கள் முல்லைக்கு உரியவை. 6, 16, 26, 36 என்னும் முறைபற்றி வரும் பாக்கள் மருதத்திற்கு உரியவை. 10, 20, 30, 40 என்னும் முறைபற்றி வரும் பாக்கள் நெஃதலுக்கு உரியவை. இந்நூல் 'களிற்று யானை நிரை', 'மணிமிடை பவளம்', 'நித்திலக்கோவை' என்னும் முப்பகுதிகளைக் கொண்டது.

1. பாடல் எண் : 36

பாடியவர் : மதுரை நக்கீரர்

திணை : மருதம்

துறை : தலைமகள் பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனோடு புலந்து சொல்லியது.

பகுவாஃ வராஅல் பல்வரி இரும்போத்துக்
கொடுவாஃ இரும்பின் கோள்இரை துற்றி,

ஆம்பல் மெல்அடை கிழிய, குவளைக்
கூம்புவிடு பல்மலர்சிதையப் பாஃந்து, எழுந்து,
அரில்படு வள்ளை ஆஃகொடி மயக்கி
தூண்டில வேட்டுவன் வாங்க வாராது,
கயிறிடு கதச்சேப்போல, மதம்மிக்கு
நாள்கயம் உழக்கும் பூக்கேழ் ஊர
வருபுனல் வையை வார்மணல் அகன்துறை
திருமருது ஓங்கிய விரிமலர்க் காவில்
நறும்பல் கூந்தற் குறுந்தொடி மடந்தையொடு
வதுவை அயர்ந்தனைஎன்ப, அலரே
கொஃசுவல் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங்கானத்து அகன்தலை சிவப்ப,
சேரன், செம்பியன், சினம்கெழு திதியன்
போர்வல் யானை பொலம்பூண் எழினி,
நாரரி நறவின் எருமை யூரன்
தேம்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயல்தேர் பொருநனென்று
எழுவர் நல்வலம் அடங்க, ஒருபகல்
முரைசொடு வெண்குடை அகப்படுத்து உரைசெல
கொன்று களம் வேட்ட ஞான்றை
வென்றிகொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே!

2. பாடல் எண் : 195

பாடியவர் : கயமனார்

திணை : பாலை

துறை : மகட்போக்கிய நற்றாஃ சொல்லியது

அருஞ்சுரம் இறந்தஎன் பெருந்தோட் குறுமகள்
திருந்துவேல் விடலையொடு வரும்என தாயே
புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி
மனைமணல் அடுத்து மாலை நாற்றி
உவந்து இனிது அயரும்என்ப; யானும்

மான்பிணை நோக்கின் மடநல் லாளை
ஈன்ற நட்பிற்கு அருளான் ஆயினும்
இன்நகை முறுவல் ஏழையைப் பல்நாள்
கூந்தல்வாரி நுசுப்பு இவர்ந்து ஓம்பிய
நலம்புனை உதவியும் உடையன் மன்னே;
அஃதறி கிற்பினோ நன்றுமன் தில்ல;
அறுவை தோயும் ஒருபெருங் குடுமி,
சிறுபை நாற்றிய பல்தலைக் கொடுங்கோல்,
ஆகுவது அறியும் முதுவாஃ, வேல!
கூறுக மாதோநின் கழங்கின் திட்பம்;
மாறா வருபனி கலுழும் கங்குலில்,
ஆனாது துயரும்எம் கண்இனிது படீஇயர்
எம்மனை முந்துறத் தருமோ ?
தன்மனை உஃக்குமோ ? யாதுஅவன் குறிப்பே ?

# கலித்தொகை

எட்டுத்தொகை நூல்களுள் பாவின் பெயரைப் பெற்ற தொகை நூல்கள், பரிபாடலும் கலித்தொகையும். அகன் ஐந்திணையாகிய அன்பின் ஐந்திணை அகப்பொருட் செஃதிகளைப் பாடுதற்குரிய தகுதி வாஃந்த பாவாக இவ்விரண்டினையும் தொல்காப்பியர் குறித்துள்ளார். கலித்தொகையை முதன்முதலாகப் பதிப்பித்தவர் சி.வை. தாமோதரம்பிள்ளை ஆவார். பதிப்பித்த ஆண்டு 1887. கலித்தொகை முழுமைக்கும் நச்சினார்க்கினியரின் சிறந்த உரை அமைந்துள்ளது. அக வாழ்க்கைப் போக்கினையும், பண்பாட்டினையும் நாடக வழக்கு, உலகியல் வழக்கு அடிப்படையில் புலனெறி வழக்காகப் பாடப்பட்டுள்ள பாடல்களில் இரண்டு பாடல்கள் பாடப் பகுதியில் இடம் பெற்றுள்ளன.

## பாலைக்கலி

1. பாடல் எண் : 10

பாடியவர் : பெருங்கடுங்கோ

திணை : பாலை

துறை : தலைவி, மூன்றன் பகுதி தலைவன் கூறிப் பொருள் வயிற்பிரிகின்ற, காலத்து, காடு கடியவாயினும், இவ்வகைப் பட்டனவும் உள என்று கூறினார். அவை காண்டலின் வருவர் எனத் தோழிக்குக் கூறி, அதற்கு நிமித்தமும் கூறி, ஆற்றுவித்தது.

### தலைவி கூற்று

அரிதாய அறன் எஃதி அருளியோர்க்கு அளித்தலும்,
பெரிதாய பகை வென்று பேணாரைத் தெறுதலும்,
புரிவு அமர் காதலின் புணர்ச்சியும் தரும் என,
பிரிவு எண்ணிப் பொருள்வயிற் சென்ற நம் காதலர்
வருவர் கொல்: வழுங்கிழாஅஃ! வலிப்பல், யான் கேளள், இனி:

‘அடிதாங்கும்’ அளவு இன்றி, அழல் அன்ன வெம்மையால்,
கடியவே – கனங் குழாஅஃ! ‘காடு’ என்றார்., அக்காட்டுள்
துடிஅடிக் கயந்தலைகலக்கிய சின்னீரைப்
பிடி ஊட்டி, பின் உ.ண்ணுங், களிறு எனவும் உரைத்தனரே.

‘இன்பத்தின் இகந்து ஒரீஇ, இலை தீந்த உலவையால்,
துன்புறூஉம் தகையவே காடு என்றார்: அ.க்காட்டுள்,
அன்பு கொண் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென் சிறகரால் ஆற்றும் புறவு எனவும் உரைத்தனரே.

கல்மிசை வேஃ வாடக் கனை கதிர் தெறுதலான்,
துன்ன.உம் தகையவே காடு என்றார்; அக்காட்டுள்
இன் நிழல் இன்மையான் வருந்திய மடப் பிணைக்குத்
தன் நிழலைக் கொடுத்து அளிக்கும், கலை எனவும் உரைத்தனரே.

என ஆங்கு—

இனை நலம் உடைய கானம் சென்றோர்
புனை நலம் வாட்டுநர் அல்லர்; மனைவயின்
பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன
நல் எழில் உண்கணும் ஆடுமால் இடனே.

## குறிஞ்சிக்கலி

2. பாடல் எண் : 1

பாடியவர் : கபிலர்

திணை : பாலை

துறை : ‘நாற்றமும், தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும், செஃவினை மறைப்பினும் செலவினும் பயில்வினும், புணர்ச்சி எதிர்ப்பாடு உள்ளுறுத்து வ.உம், உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை, தன்னை அவள் மறையாமை காரணமாக, மெஃயினும் பொஃயினும் வழிநிலை பிழையாது, பல்வேறு கவர் பொருள் நாட்டத்தான் தலைமகட்குத் தோழி கூறியது.

### தோழி கூற்று

கயமலர் உண்கண்ணாஃ! காணாஃ: ஒருவன்
வயமான் அடி தேர்வான் போல, தொடை மாண்ட
கண்ணியன் வில்லன், வரும்: என்னை நோக்குபு,

முன்னத்தின் காட்டுதல் அல்லது, தான் உற்ற
நோஃ உரைக்கல்லான் பெயரும்மன், பல் நாளும்,
பாயல் பெறேஎன், படர் கூர்ந்து, அவன்வயின்
சேயேன்மன் யானும் துயர் உழப்பேன்; ஆயிடைக்
கண் நின்று கூறுதல் ஆற்றான், அவனாயின்;
பெண் அன்று, உரைத்தல், நமக்காயின், இன்னதூஉம்
காணான் கழிதலும் உண்டு, என்று, ஒரு நாள், என்
தோள் நெகிழ்பு உற்ற துயரால் துணிதந்து, ஓர்.
நாண் இன்மை செஃதேன்; நறுநுதால்! ஏனல்
இனக்கிளி யாம் கடிந்து ஓம்பும் புனத்து அயல்,
ஊசல் வளர்ந்து ஆட, ஒரு ஞான்று வந்தானை,
ஐய! சிறிது என்னை ஊக்கி எனக் கூற,
தையால்!நன்று என்று அவன் ஊக்க, கை நெகிழ்வு
பொஃயாக வீழ்ந்தேன், அவன் மார்பின், வாயாச் செத்து,
ஒஃயென ஆங்கே எடுத்தனன் கொண்டான், மேல்
மெஃ அறியாதேன் போல் கிடந்தேன்மன்; ஆயிடை
மெஃ அறிந்து ஏற்று எழுவேனாயின், மற்று ஒஃயென
ஒண்குழாஃ! செல்க எனக் கூறி விடும் பண்பின்
அங்கண் உடையன் அவன்.

# புறநானூறு

சங்கப் புலவர்களால் பாடப்பட்ட தன்னுணர்ச்சிப் பாடல்களின் தொகுப்பு எட்டுத் தொகை நூல்கள். பண்டைக் கால மக்களின் வாழ்க்கை முறையும் அவர்கள் போற்றிய விழுமியங்களும் அப்பாடல்களின் பாடுபொருளாக விளங்குகின்றன. இத்தொகை நூல்களின் பெயர்கள் அகம்புறமென்ற திணையடிப்படையிலும், பாட்டின் அளவு, பொருட்சிறப்பு போன்றவற்றின் அடிப்படையிலும் அமைந்துள்ளன. எட்டுத் தொகை நூல்களுள் பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருளைப் பற்றியன. புறம், புறப்பாட்டு எனவும் இந்நூல் வழங்கப்படும். பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடிய கடவுள் வாழ்த்துடன் 400 பாடல்களையுடையது. மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், கடையெழு வள்ளல்கள், அவர்தம் கொடை, போர் நிகழ்வுகள், அக்கால மக்களின் வாழ்க்கை முறை, போன்ற பல புறச் செஃதிகளைப் பற்றியது இந்நூல். அரசர்களுக்கும், புலவர்களுக்கும் இடையே நிலவிய நட்பு, நிலைத்த உண்மைகள் ஆகியவற்றை விரிவாக எடுத்துக் கூறும் இந்நூலில், போரிலும் அரசர்கள் கடைப்பிடித்த அறநெறியையும் காணலாம். இந்நூலைத் தொகுத்தார், தொகுப்பித்தார் பெயர் தெரியவில்லை. பாடப்பகுதியில் அரசப்புலவர்கள் பாடிய ஐந்து பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

1. பாடியவர் : தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்
   திணை .: காஞ்சி
   துறை : வஞ்சினக்காஞ்சி

‘நகுதக்கனரே நாடு மீக் கூறுநர்;
இளையன் இவன்’ என உளையக் கூறி,
‘படுமணி யிரட்டும் பாஅடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாம் என்று
உறுதுப்பு அஞ்சாது உடல்சினம் செருக்கி
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்கு அகப்படேன் ஆயின் – பொருந்திய
என்நிழல் வாழ்நர் செந்நிழல் காணாது,
‘கொடியன் எம்இறையெனக் கண்ணீர் பரப்பி,
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக;
ஓங்கிய சிறப்பின் உயாந்த கேள்வி

மாங்குடி மருதன் தலைவன் ஆக,
உலகமொடு நிலைஇயப் பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை;
புரப்போர் புன்கண் கூர,
இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே.

2. பாடியவர் : சேரமான் கணைக்கால் இரும்பொறை
திணை : பொதுவியல்
துறை : முதுமொழிக் காஞ்சி

குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
'ஆள்அன்று' என்று வாளில் தப்பார்,
தொடர்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேள்அல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத்தீத் தணிய
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்ம ரோவிவ் உலகத் தானே ?

3. பாடியவர் : பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
திணை : பொதுவியல்
துறை : பொருண்மொழிக் காஞ்சி

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
பிறப் பு ஓ அன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
'மூத்தோன் வருக' என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.

4. பாடியவர் : பாண்டியன் அறிவுடைநம்பி

திணை : பொதுவியல்

துறை : பொருண்மொழிக் காஞ்சி

படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெஃயுடை அடிசில் மெஃபட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோக்குப்
பயக்குறை இல்லை தாம்வாழும் நாளே

5. பாடியவர் : கோப்பெருஞ்சோழன்

திணை : பாடாண்

துறை : இயன்மொழி

கேட்டல் மாத்திரை அல்லது, யாவதும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமையர் ஆயினும்
அரிதே தோன்றல்! அதற்பட ஒழுகல் என்று
ஐயங் கொள்ளன்மின், ஆர் அறிவாளீர்,
இகழ்விலன்; இனியன்; யாத்த நண்பினன்;
புகழ்கெட வ.உம் பொஃ வேண்டலனே;
தன்பெயர் கிளக்குங் காலை என்பெயர்.
பேதைச் சோழன் என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன்; அதன்தலை
இன்னது ஓர்காலை நில்லலன்;
இன்னே வருகுவன் ஒழிக்க அவற்குஇடமே!

## 1. திருமுருகாற்றுப்படை : பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று

முருகப் பெருமானைத் தொழுது வீடுபேற்றைப் பெற்றவன், அப்பேற்றை விரும்புபவனை ஆற்றுப்படுத்துவது ஆகும். முந்நூற்றுப் பதினெழு (317) அடிகளில் ஆசிரியப்பாவில் இந்நூலை யாத்தவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், தமிழ், வடமொழி இரண்டிலுமே நல்ல புலமை பெற்ற இவர், முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாஃ, திருவாவினன்குடி, திருவேரகம், குன்று தோறாடல், பழமுதிர்சோலை என்னும் அறுபடை வீடுகளின் பெருமையையும், சிறப்பையும் இயற்கை எழிலையும் வெளிப்படுத்துகின்றார். இயற்கையோடு இயைந்து வாழ்ந்து வழிபட்ட பழந்தமிழர் இயற்கையில் இறைவனைக் கண்டதையும் இந்நூலின் வழி அறிய முடிகின்றது. நக்கீரர் வீடு பேற்றை வேண்டியோர்க்கு அருளும் தன்மையைக் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகின்றார்.

மணங்கமழ் தெஃவத்து இளநலங் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவனின் வரவென
அன்புடை நன்மொழி அளைஇ விளிவின்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகத் தோன்ற விழுமிய
பெறவரும் பரிசில் நல்குமதி (திரு.மு.290–295)

திருமுருகாற்றுப்படை பிற்காலப் பக்தி இயக்க வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்திருக்கின்றது என்பதில் ஐயமில்லை. இதற்கு நச்சினார்க்கினியர் உரையும் உள்ளது.

# திருமுருகாற்றுப்படை

## 1. திருப்பரங்குன்றம்

### குமரவேளின் பெருமை

#### தெஃவயானையின் கணவன்

உலகம் உவப்ப வலன்ஏற்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு,
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி,
உறுநர்த் தாங்கிய மதன்உடை னோன்தாள்,
செறுநர்த் தேஃத்த செல்உறழ் தடக்கை,
மறுஇல் கற்பின் வாணுதல் கணவன்

#### கடப்பமாலை புரளும் மார்பினன்

கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை,
வாள்போழ் விசும்பில் வள்உறை சிதறி,
தலைப்பெயல் தலைஇய தண்நறுங் கானத்து,
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து
உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்

#### சூரர மகளிரின் இயல்பு

மால்வரை நிவந்த சேண்உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடி.
கணைக்கால், வாங்கிய நுகப்பின், பணைத்தோள்,
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்,
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்,
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்,
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழை,
சேண்இகந்து விளங்கும் செயிர்தீர் மேனி
துணையோர் ஆஃந்த இணைஈர் ஒதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடைஇடுபு.
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளி,
தெஃவ உத்தியொடு வலம்புரி வயின்வைத்து

திலகம் தைஇய தேம்கமழ் திருநுதல்
மகரப் பகுவாஃ தாழ மண்ணுறுத்து,
துவர முடித்த துகள்அறும் முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇ, கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்இணர் அட்டி,
கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇ, துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்ப, திண்காழ்
நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேஃவை,
தேம்கமழ் மருதுஇணர் கடுப்ப, கோங்கன்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்தாது அப்பி, காண்வா.
வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியா,
கோழி ஓங்கிய வென்றுஅடு விறற்கொடி
வாழிய பெரிது என்றுஏத்தி பலர்உடன்
சீர்திகழ் சிலம்புஅகம் சிலம்பப் பாடி
சூரர மகளிர் ஆடும் சோலை.

## காந்தளின் கண்ணி சூடிய சென்னியன்

மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்து,
கரும்பும் மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்

## முருகன் சூரனைத் தடிந்த வகை

பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்கு,
சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்

## பேஃமகளின் துணங்கைக் கூத்து

உலறிய கதுப்பின், பிறழ்பல் பேழ்வாஃ,
கழல்விழிப் பசுங்கண், சூர்த்த நோக்கின்,
கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்

பெருமுலை அலைக்கும் காதின், பிணர்மோட்டு,
உருகெழு செலவின், அஞ்சுவரு பேஃமகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருத்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி, வெருவர
வென்றுஅடு விறற்களம் பாடி, தோள்பெயரா,
நிணம்தின் வாயள் துணங்கை தூங்க

## மாமரத்தை வெட்டிய வெற்றி

இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை,
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி,
அவுணர் நல்வலம் அடங்க, கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து,
எஃயா நல்இசை, செவ்வேற் சேஎஃ

## ஆற்றுப்படுத்தல்

சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்,
செலவுநீ நயந்தனை ஆயின், பலஉடன்,
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாஃப்ப,
இன்னே பெறுதி, நீ முன்னிய வினையே.

## திருப்பரங்குன்றில் முருகன் வீற்றிருத்தல்

செருப்புகன்று எடுத்த சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்க,
பொருநர்த் தேஃந்த போர்அரு வாயில்,
திருவீற் றிருந்த தீதுநீர் நியமத்து,
மாடம்மலி மறுகின் கூடற் குடவயின்
இருஞ்சேற்று அகன்வயல் விரிந்துவாஃ அவிழ்ந்த
முள்தாட் தாமரைத் துஞ்சி, வைகறைக்
கள்கமழ் நெஃதல் ஊதி, எல்படக்
கண்போல் மலர்ந்த காமரு கனைமலர்,

அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றுஅமர்ந்து உறைதலும் உரியன், அதாஅன்று.

## 2. திருச்சீர் அலைவாஃ

### ஆறுமுருகன் யானையின் மேல் ஏறி வருதல்

வைந்நுதி பெழரத வடுஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வர,
படுமணி இரட்டும் மருங்கின், கடுநடை,
கூற்றத் தன்ன மாற்றுஅரு மொஃம்பின்
கால்கிளர்ந் தன்ன வேழம் மேல்கொண்டு

### ஆறுமுகங்களின் இயல்புகள்

ஐவேறு உருவின் செஃவினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப,
நகைதாழ்பு துயல்வ.உம் வகைஅமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாள்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்ப,
தாஇல் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன்நேர்பு எழுதரு வாள்நிற முகனே:
மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்க,
பல்கதிர் விரிந்தன்று, ஒருமுகம், ஒருமுகம்,
ஆர்வலர் ஏத்த, அமர்ந்து இனிதுஒழுகி,
காதலின் உவந்துவரம் கொடுத்தன்றே: ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே: ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடி,
திங்கள் போலத்திசை விளக்கும்மே: ஒருமுகம்
செறுநர்த் தேஃத்துச் செல்சமம் முருக்கி,
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே: ஒருமுகம்
குறவர் மடமகள், கொடிபோல் நுசுப்பின்

மடவரல், வள்ளியொடு நகைஅமர்ந் தன்றே:
ஆங்கு, அம்மூஇரு முகனும், முறைநவின்று ஒழுகலின்

## பன்னிரு கைகளின் தொழில்கள்

ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பின்
செம்பொறி வாங்கிய, மொஃம்பின், சுடர்விடுபு,
வண்புகழ் நிறைந்து, வசிந்துவாங்கு, நிமிர்தோள்:
வீண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை, உக்கம் சேர்த்தியது ஒருகை:
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது ஒருகை,
அங்குசம் கடாவ ஒருகை: இருகை
ஐஇரு வட்டமொடு எஃகுயவம் திரிப்ப: ஒருகை
மார்பொடு விளங்க, ஒருகை
தாரொடு பொலிய: ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப, ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட: ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளை பொழிய, ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட:
ஆங்குஅப் பன்னிருகையும் பாற்பட இயற்றி

## அலைவாயில் ஆறுமுகன் வந்தருளியிருக்கும் காட்சி

அந்தரப் பல்லியம் கறங்க, திண்காழ்
வயிர்எழுந்து இசைப்ப, வால்வளை ஞால,
உரம்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்லெ காடி அகவ,
விசும்பு ஆறுஆக விரைசெலல் முன்னி,
உலகம் புகழ்ந்த ஓங்குஉயர் விழுச்சீர்
அலைவாஃச் சேறலும் நிலைஇய பண்பே, அதாஅன்று

## 3. திருஆவினன்குடி

### முன்செல்லும் முனிவரது இயல்புகள்

சீரை தைஇய உடுக்கையர், சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசுஅற இமைக்கும் உருவினர், மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்புஎழுந்து இயங்கும் யாக்கையர், நன்பகல்
பலஉடன் கழிந்த உண்டியர், இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர், யாவதும்
கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர், காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர், இடும்பை
யாவதும் அறியா இயல்பினர், மேவரத்
துனிஇல் காட்சி முனிவர், முன்புக

### பாடுவார் இயல்பு

புகைமுகந் தன்ன மாசுஇல் தூஉடை,
முகைவாஃ அவிழ்ந்த தகைசூழ் ஆகத்து,
செவிநேர்பு, வைத்த செஃவுறு, திவவின்
நல்யாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர், இன்நரம்பு உளர

### பாடும் மகளிர் இயல்பு

நோஃஇன்று இயன்ற யாக்கையர், மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர், அவிர்தொறும்
பொன்னுரை கடுக்கும் திதலையர், இன்நகைப்
பருமம் தாங்கிய பணிந்துஏந்து அல்குல்,
மாசுஇல், மகளிரொடு மறுஇன்றி விளங்க:

### திருமால், சிவன், இந்திரன் ஆகியோரின் இயல்புகள்

கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால்எயிற்று,
அழல்என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்,

பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ஏறு
வலம்வயின் உயரிய, பலர்புகழ் திணிதோள்,
உமைஅமர்ந்து விளங்கும், இமையா முக்கண்,
மூஎயில் முருக்கிய, முரண்மிகு செல்வனும்
நூற்றுப் பத்துஅடுக்கிய நாட்டத்து– நூறுபல்
வேள்வி முற்றிய வென்றுஅடு கொற்றத்து,
ஈர் இரண்டு ஏந்திய மருப்பின், எழில்நடை,
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்

## பிரமனுக்காகத் திரண்டு வந்த தேவர்கள்

நாற்பெருந் தெஃவத்து நல்நகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக.
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றி,
தாமரை பயந்த தாஇல் ஊழி
நான்முக ஒருவற் சுட்டி, காண்வர,
பாலில் தோன்றும் இகல்இல் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு,
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்

## தேவர்கள் வருகின்ற காட்சி

மீன்பூத் தன்ன தோன்றலர், மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர், வளியிடைக்
தீஎழுந் தன்ன திறலினர், தீப்பட
உரும்இடித் தன்ன குரலினர், விழுமிய
உறுகுறை, மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்,
அந்தரக் கொட்பினர், வந்துஉடன் காண

## முருகன் மடந்தையோடு வீற்றிருத்தல்

தாஇல் கொள்கை மடந்தையொடு சிலநாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன். அதாஅன்று.

## 4. திரு ஏரகம்

### இரு பிறப்பாளரின் இயல்பு

இருமுன்று எஃதிய இயல்பினின் வழாஅது,
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி,
அறுநான்கு இரட்டி இளமைநல் யாண்டு
ஆறினில் கழிப்பிய, அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து,
இருபிறப் பாளர், பொழுதுஅறிந்து நுவல

### அந்தணர் வழிபடும் முறை

ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்.
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர், தற்புகழ்ந்து,
ஆறுஎழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப் பாடி,
விரைஉறு நறுமலர் ஏற்றி – பெரிதுஉவந்து,
ஏரகத்து உறைதலும் உரியன். அதாஅன்று

## 5. குன்றுதொறு ஆடல்

### குரவைக் கூத்து

பைங்கொடி, நறைக்காஃ, இடைஇடுபு, வேலன்,
அம்பொதிப் புட்டில் விரைஇ, குளவியொடு
வெண்கூ, தாளம் தொடுத்த கண்ணியன்:
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்:
கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்
நீடுஅமை விளைந்த தேக்கண் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து,
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர

## குன்றுதோறும் ஆடல்புரியும் தன்மை

விரல்உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கான்,
குண்டு கனைபூத்த வண்டுபடு கண்ணி,
இணைத்த கோதை, அணைத்த கூந்தல்,
முடித்த குல்லை, இலையுடை நறும்பூ,
செங்கால் மராஅத்த, வால்இணர், இடைஇடுபு.
கரும்புஉணத் தொடுத்த பெருந்தண் மாந்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ,
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செஃயன், சிவந்த ஆடையன், செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்,
கச்சினன், கழலினன், செச்சைக் கண்ணியன்
குழலன், கோட்டன், குறும்பல் லியத்தன்,
தகரன், மஞ்ஞையன், புகர்இல் சேவல்அம்
கொடியன், நெடியன், தொடிஅணி தோளன்
நரம்புஆர்த் தன்ன இன்குரல் தொகுதியொடு,
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்,
முழவு உறழ் தடக்கையின் இயல ஏந்தி,
மென்தோள் பல்பிணை தழீஇ, தலைத்தந்து–
குன்றுதொறு ஆடலும் நின்றதன் பண்பே அதோஅன்று

## 6. பழமுதிர்சோலை

## முருகன் இருப்பிடங்கள்

சிறுதினை மலரொடு விரைஇ, மறிஅறுத்து,
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ,
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்,
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்,
வேலன் தைஇய வெறிஅயர் களனும்,
காடும் காவும், கவின்பெறு துருத்தியும்,

பாறும் குளனும், வேறுபல் வைப்பும்,
சதுக்கமும் சந்தியும், புதுப்பூங் கடம்பும்,
மன்றமும் பொதியிலும், கந்துடை நிலையினும்

## குறமகளின் வெறியாட்டு

## நகரில் முருகனை ஆற்றுப்படுத்தல்

மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர,
நெஃயோடு ஐயனி அப்பி, ஐதுஉரைத்து,
குடத்தும் பட்டு, கொழுமலர் சிதறி,
முரண்கொள் உருவின் இரண்டுஉடன் உடீஇ,
செந்நூல் யாத்து, வெண்பொரி சிதறி,
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செஃது, பல்பிரப்பு இரீஇ,
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்து,
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணைஅற அறுத்துத் தூங்க நாற்றி,
நளிமலைச் சிலம்பில் நல்நகர் வாழ்த்தி,
நறும்புகை எடுத்து, குறிஞ்சி பாடி,
இமிழ்இசை அருவியொடு இன்இயம் கறங்க,
உருவப் பல்பூத் தூஉஃ, வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பி, குறமகள்
முருகுஇயம் நிறுத்து, முரணினர் உட்க,
முருகுஆற்றுப் படுத்த உருகெழு வியல்நகர்

## முருகனை வழிபடுதல்

ஆடுகளம் சிலம்பப் பாடி, பலவுடன்
கோடுவாஃ வைத்து, கொடுமணி இயக்கி,
ஒடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி,
வேண்டுநர் வேண்டியாங்கு எஃதினர் வழிபட
ஆண்டுஆண்டு உறைதலும் அறிந்த வாறே

## முருகனைக் கண்டு துதித்தல்

ஆண்டுஆண்டு ஆயினும் ஆக, காண்தக
முந்துநீ கண்டுழி முகன்அமர்ந்து ஏத்தி,
கைதொழூஉப் பரவி, கால்உற வணங்கி
நடும்பெரஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை,
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப,
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ!
ஆல்கெழு கடவுட் புதல்வர் மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழைஅணி சிறப்பின் பழையோள் குழவி!
வானோர், வணங்குவில், தானைத் தலைவ!
மாலை மார்ப! நூல்அறி புலவ!
செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொல்மலை!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக!
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபேர் ஆள!
அலந்தோர்க்கு அளிக்கும், பொலம்பூண், சேஎஃ!
மண்டுஅமர் கடந்தநின் வென்றுஆடு அகலத்து,
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்!
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்!
சூர்மருங்கு அறுத்த மொஃம்பின் மதவலி!
போர்மிகு பொருந! குரிசில் எனப்பல,
யான்அறி அளவையின், ஏத்தி, ஆனாது

## கருதி வந்ததை மொழிதல்

நின்அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்,
நின்அடி உள்ளி வந்தனென்: நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமையோஃ! எனக்
குறித்து மொழியா அளவையின்

## சேவிப்போர் கூற்று

.... ...... ...... குறித்துஉடன்
வேறுபல் உருவின் குறும்பல் கூளியர்,
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி,
அளியன் தானே முதுவாஃ இரவலன்:
வந்தோன் பெரும! நின் வண்புகழ் நயந்து என
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தி;

## முருகன் அருள்புரிதல்

தெஃவம் சான்ற திறல்விளங்கு உருவின்,
வான்தோஃ நிவப்பின் தான்வந்து எஃதி,
அணங்குசால் உயர்நிலை தழீஇ, பண்டைத்தன்
மணம்கமழ் தெஃவத்து, இளநலம் காட்டி,
அஞ்சல் ஒம்புமதி, அறிவல்நின் வரவு என,
அன்புடை நல்மொழி அளைஇ, விளிவுஇன்று,
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகித் தோன்ற, விழுமிய
பெறல் அரும் பரிசில் நல்குமதி.

## அருவியின் காட்சியும் இயற்கை வளமும்

.... ..... ...... பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி, அகில்சுமந்து,
ஆர முழுமுதல் உருட்டி, வேரற்
பூவுடை அலங்குசினை புலம்ப, வேர்கீண்டு,
விண்பொரு நெடுவரைப் பரிதியின் தொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய, நன்பல

ஆசினி முதுகளை கலாவ, மீமிசை
நாக நறுமலர் உதிர, யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்ப, பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசி, பெருங் களிற்று
முத்துடை வான்கோடு தழீஇ, தத்துற்று
நன்பொன் மணிநிறம் கிளர, பொன்கொழியா,
வாழை முழுமுதல் துமிய, தாழை
இளநீர் விழுக்குலை உதிர, தாக்கி,
கூறிக்கொடிக் கருந்துணர் சாய, பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇ,
கோழி வயப்பெடை இரிய, கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாஃ அன்ன
குஉமயிர் யாக்கைக் குடாஅடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறிய, கருங்கோட்டு
ஆமா நல்ஏறு சிலைப்ப, சேண்நின்று
இழுமென இழிதரும் அருவி
பழம் முதிர் சோலை மலைகிழ வோனே!

குமரவேளை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது

திருமுருகாற்றுப்படை மூலம் முற்றும்

# நான்காம் பருவம் : தமிழ்த் தாள் IV

## வினாத்தாள் அமைப்பு

நேரம் : 3 மணி மதிப்பெண் : 100

பிரிவு அ : ஒரு சொல் / தொடரில் விடை எழுதுக (10 x 1 = 10)

ஒவ்வொரு அலகிலிருந்தும் இரண்டு வினாக்கள்

பிரிவு ஆ : இரண்டு பக்க அளவில் விடை எழுதுக (5 x 6 = 30)

செஃயுள் : 2 வினாக்கள்

நாடகம் : 1 வினா

இலக்கணம் : 1 வினா

இலக்கிய வரலாறு : 1 வினா

பிரிவு இ : கட்டுரை அளவில் விடை எழுதுக (5 x 12 = 60)

செஃயுள் : 2 வினாக்கள்

நாடகம் : 1 வினா

இலக்கிய வரலாறு : 1 வினா

படைப்பிலக்கியப் பயிற்சி : 1 வினா

குறிப்பு : ஆ.இ பிரிவுகளில் வினாக்கள் ‘இது’ அல்லது ‘அது’ என்ற வகையில் அவ்வவற்றிற்குரிய அலகுகளிலிருந்து அமைய வேண்டும்.

# பாரதியார் பல்கலைக்கழகம், கோவை – 46

## B.A. B.Sc. நான்காம் பருவம் – பகுதி 1 – தாள் IV

## (செய்யுள், நாடகம், இலக்கணம்)

## பொதுத்தமிழ் (பி.ஏ. பி.எஸ்ஸி etc. )

### மாதிரி வினாத்தாள்

பகுதி – அ (10 x 1 = 10)

காலம் : 3 மணி மதிப்பெண்கள் : 100

**ஓரிரு சொற்களில் / தொடரில் விடைதருக:**

1. அகப்பாடல்களுள் குறிஞ்சித்திணை பாடுவதில் வல்லவர் யார் ?

2. தகையணங்குறுத்தல் – பொருள் தருக

3. வஞ்சினக் காஞ்சி என்றால் என்ன ?

4. கோப்பெருஞ்சோழனின் நண்பர் யார் ?

5. கனகை – என்ற கவிதை நாடகத்தின் ஆசிரியர் யார் ?

6. கனகையின் தோழியர் யாவர் ?

7. அகநானூற்றின் பிரிவுகள் யாவை ?

8. நற்றிணையின் அடிவரையறையைக் கூறுக ?

9. மருதத்திணையின் உரிப் பொருளைக் கூறுக ?

10. நெய்தல் திணையின் கடவுள் யார் ?

பகுதி – ஆ (5 x 6 = 30)

**இரு பக்க அளவில் விடை தருக**

11. அ. மகட்போக்கிய செவிலித்தாயின் கூற்றாகக் கோடல் கொற்றனார் கூறுவது யாது ?

அல்லது

ஆ. உலோச்சனார் பாடலின் கருத்தைத் தொகுத்துத் தருக

12. அ. கல்வியின் சிறப்பைப் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் எவ்வாறு உரைக்கிறார் ?

அல்லது

ஆ. திருப்பரங்குன்றத்தின் சிறப்புக் குறித்து முருகாற்றுப்படை கூறும் செஃதி தருக

13. அ. வீடணன் பாத்திரப்படைப்பு

அல்லது

ஆ. மண்டோதரியின் பாத்திரப்படைப்பைக் கனகை வழி விளக்குக

14. அ. முல்லை நிலத்துக்குரிய முதல், கரு, உரிப் பொருள்களைத் தருக

அல்லது

ஆ. இ யன் மொழித் துறைக்கு இலக்கணம் கூறிப்பாடல் சான்றுடன் பொருத்திக் காட்டுக

15. அ. குறுந்தொகை

அல்லது

ஆ. கலித்தொகை பற்றிய இலக்கிய வரலாற்றுக் கட்டுரை தருக

பகுதி இ. (5 x 12 = 60)

கட்டுரைவடிவில் விடை தருக

16. அ. அகநானூற்றில் வரலாற்றுச் செஃதிகள் இடம்பெற்றுள்ளமையை நும் பாடப்பகுதி கொண்டு விவரி

அல்லது

ஆ. குறிஞ்சிக்கலி, தோழி, கூற்றுப் பாடலில் வெளிப்படும் கருத்துக்களை விளக்குக

17. அ. அரசர்களும் சிறந்த புலவர்களாக விளங்கியமையை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக

அல்லது

ஆ. ஆற்றுப்படை இலக்கணம் திருமுருகாற்றுப்படையோடு பொருந்துமாற்றைப் புலப்படுத்துக

18. அ. ‘கனகை’ துன்பியல் நாடகம் என்பதை நிறுவுக

அல்லது

ஆ. ‘கனகை’ நாடகம் கொண்டு ஆசிரியர் கா. அரங்கசாமியின் கவித்திறனைப் புலப்படுத்துக

19. அ. தமிழ்நாடக வளர்ச்சி

அல்லது

ஆ. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக

20. அ. ‘குழந்தைத் தொழிலாளர்கள்’ என்ற கருவை அடிப்படையாகக் கொண்டு சிறுகதை எழுதுக.

அல்லது

ஆ. ‘அன்பு’ என்ற தலைப்பில் புதுக்கவிதை வரைக